# இஸ்ரவேலர்கள் செய்ய வேண்டியதை யோசுவா பார்த்தான்

**தேவன் நமக்கு ஒரு தரிசனத்தைத் தரும்போது நாம் சிறந்த விவரங்களைத் தேடி திட்டங்கள் இட்டு அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.**

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதும், உங்கள் உடன் ஊழியர்களுக்கு இருக்கும் நேரத்திற்குப் பொருந்துவதுமான செயல்பாடுகளைச் செய்யவும். சிறுவர்களுக்குப் போதிப்பவர்கள் பாடம் V1b யை வாசிக்கட்டும்.

1. **கர்த்தருக்குப் பயப்பட வார்த்தையாலும் ஜெபத்தாலும் ஆயத்தமாகுங்கள்.**

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, எங்களுக்கு ஆணையிடுபவர் நீரே. நீர் என்ன செய்ய விரும்புகிறீர் என்பதை எங்களுக்குக் காட்டும்." நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லும். சிறந்த விவரங்கள் கிடைக்க வழி நடத்தும். அதன் மூலம் நாங்கள் ஞானமான முடிவுகளை எடுக்க முடியும்."

எண்ணாகமம் 13:1-16 ல் காண்க.

- கர்த்தர் என்ன செய்யப் போகிறார்? *(வசனம் 2. இஸ்ரவேலருக்குக் கானான் தேசத்தைக் கொடுக்கப் போகிறார்).*
- மக்கள் என்ன செய்ய வேண்டும்? *(பதில். நாட்டை வேவு பார்க்க வேண்டும். அதாவது, அந்த நாட்டைப்பற்றிய விவரங்களைச் சேர்க்க).*
- அதைச் செய்வதற்குக் கட்டளை இட்டது யார்? *(3)*

வேவுகாரர்கள் படிக்க வேண்டியதாய் இருந்தது என்ன என்பதை எண்ணாகமம் 13:17-24ல் காண்க.

- எங்கே போகவேண்டும் என்பதைப் பற்றி *(வசனம் 17. குறிப்பு: கானானுக்கு இரண்டு முக்கியப் பகுதிகள் இருந்தன. மலைப்பிரதேசமும், கீழ்நிலமான தெற்குநாடும்) (Negeb)*
- மக்களின் பலம் பற்றி *(18).*
- மக்களின் எண்ணிக்கை பற்றி.
- தேசத்தைப் பற்றி *(19).*
- பட்டிணங்களைப் பற்றி .
- விவசாயத்தைப் பற்றி *(20).*
- காடுகளைப் பற்றி.
- விளை பொருட்களைப் பற்றி.



**நல்ல விவரங்களைப் பெறுங்கள்**

ஒவ்வொரு மொழி இனத்திலும், கோத்திரத்திலும், மக்களிலும், தேசத்திலும் கர்த்தர் தமக்காக சீஷர்களை உருவாக்கும்படி நம்மிடம் கூறியிருக்கிறார். ஒவ்வொரு மக்கள் சமுதாயத்தைப் பற்றியும் நம்மால் முடிந்த அளவிற்கு கற்றுக் கொள்ளவேண்டும். இதன் மூலம், ஏற்கும் மனப்பக்குவம் கொண்ட குடும்பங்களை எவ்வாறு கண்டறிந்து சீஷர்களை அவர்களிடையே உருவாக்க முடியும் என்பதை அறிய முடியும். மக்களைக் கண்டறிவது அறுவடை போன்றது என்று இயேசு கூறியிருப்பதால் நாம் மூன்று வகையான விவரங்களைத் தேடுகிறோம்.

**அறுவடை நிலத்தைப் பற்றி.**

அ) ஒவ்வொரு வட்டாரத்திலும் வாழும் வெவ்வேறு வகையான மக்கள் சமுதாயங்கள் எவை?

ஆ) ஒவ்வொரு சமுதாயத்தின் மக்கட்தொகை என்ன?

இ) அவர்களுடைய மொழி, சமுதாயநிலை, ஜாதி, பொருளாதாரநிலைமை கலாச்சாரக் கூறுகள் என்ன?

ஈ) அவர்களை நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்ளப் போகிறீர்கள்?

உ) அவர்களுடைய மத நம்பிக்கைகளும் ஆவிக்குரிய பழக்கவழக்கங்களும் என்ன?

ஊ) இயேசுவைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? கிறிஸ்தவர்களைக் குறித்த அவர்களின் மனநிலை என்ன?

**அறுவடைப் படையைப் பற்றி.**

எ) சீஷர்களை உருவாக்க முயற்சி செய்யும் வேறு கிறிஸ்தவ சபைகள், ஊழியங்கள் அமைப்புகள் எவை?

ஏ) எந்த மக்கள் சமுதாயத்தாரிடம் அவர்கள் பணிபுரிகின்றனர்?

ஐ) அவர்களது அலுவலகங்கள் எங்கே இருக்கின்றன? அவர்களுடைய பணியாளர்கள் எங்கே தங்கியுள்ளனர்?

ஒ) இந்த ஊழியங்கள் சிறப்பாக செய்யக்கூடிய பணிகள் எவை?

ஓ) அவர்களுடைய ஊழியக்காரர்களின் சமுதாய கலாச்சார, மொழியியல் தனிக்கூறுகள் எவை?

ஔ) இவைகளில் எந்த ஊழியங்கள் உங்களுடனும் பரஸ்பரமும் உதவக் கூடியவை?

**அறுவடைப் பலனைப் பற்றி.**

க) ஒவ்வொரு சமுதாயக்குழுவிலும் இருக்கும் சீஷர்களின் விகிதம் என்ன?

ங) இந்த விகிதாச்சாரம் வளர்கிறதா குறைகிறதா?

ச) ஒவ்வொரு வருடமும் ஞானஸ்நானம் பெறும் விசுவாசிகளின் விகிதம் என்ன?

ஞ) ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிக்கப்படும் சபைகள் மற்றும் சபைக்குழுவின் விகிதம் என்ன?

ட) சபைகளின் புதிய தலைவர்கள் எவ்வாறு பயிற்றுவிக்கப்படுகின்றனர்?

ண) புதிய சீஷர்களை எவ்வழிகளில் எல்லாம் உருவாக்குகிறார்கள்?

தேவன் யோசுவாவுக்குக் கொடுத்த தரிசனம் என்ன என்பதை **யோசுவா 1:1-11**ல் காண்க.

- கர்த்தரின் வாக்குத்தத்தம் *(2 & 5)*
- யோசுவாவின் கீழ்ப்படிதல் *( 8 & 9)*
- யோசுவாவின் திட்டங்கள் *(10 & 11)*

**2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்**

பயிற்சி காலங்களின் புதிய மேய்ப்பர்கள் தங்கள் தரிசனத்தைப் பற்றிக் கூற உதவுங்கள். தரிசனத்தை நிறைவேற்ற அவர்கள் எடுக்கும் முயற்சிகளைக் குறித்து அவர்களோடு திட்டமிடுங்கள். நல்ல விவரங்கள் கிடைக்க அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.


உங்கள் சொந்த சமுதாயத்தில் உள்ள அறுவடை குறித்து பகுதி 1ல் உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சி செய்யவும்.

உங்கள் அருகில் இருக்கும் வேறு சமுதாய மக்கள் குறித்த பகுதி 1 ல் இருக்கும் கேள்விகளுக்கு பதில் தருவதற்கு முயற்சி செய்யுங்கள்.

பிற சபைகள் மற்றும் அமைப்புகளை அணுகி நல்ல விவரங்களைப் பெற முயற்சி செய்யுங்கள். அல்லது அந்த விவரங்களைப் பெற ஒத்துழையுங்கள்.

மற்றவர்களும் விரும்பினால், உங்கள் வட்டாரத்தில் உள்ள மக்கள் சமுதாயங்களைப் பற்றிய விவரங்களை சேகரிக்க ஓர் ஆராய்ச்சி குழுவை ஏற்பாடு செய்யவும்.

அறுவடை பலன்




வருடம்

உங்கள் நாட்டில் உள்ள கிறிஸ்தவ ஆராய்ச்சி அலுவலகங்களைப் பற்றி வேறு கிறிஸ்தவத் தலைவர்களிடம் விசாரியுங்கள். அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளத் திட்டமிடுங்கள். உங்கள் வட்டாரத்தில் உள்ள சென்றடையாத மக்களைப் பற்றியும் இடங்களைப் பற்றியும் விவரம் கேட்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

கானான் தேசத்துக்குள் சென்று வந்த வேவுகாரர்களைப்பற்றிய கதையை எண்ணாகமம் 13&14ல் **வாசிக்கவும்** அல்லது நடிக்கவும். கவனிக்க வேண்டியவை:

- கீழ்ப்படிய மறுத்த மக்கள் எவ்வாறு வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் சாகும்வரை அலைந்து திரிந்தனர்.
- உண்மையுள்ள யோசுவாவும் காலேபும் எவ்வாறு புதிய தலைமுறையினரை நாட்டிற்குள் அழைத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

**சிறுவர்கள்** தாங்கள் ஆயத்தம் செய்ததை வழங்கட்டும்.

புறக்கணிக்கப்பட்ட மக்கள் சமுதாயங்களையும் அவர்கள் மத்தியில் ஊழியர்களை அனுப்புவது குறித்தும் திட்டங்களை **விவாதியுங்கள்.** ஏற்கனவே இதை யாராவது செய்திருந்தால் விளைவுகளை அவர்கள் அறிவிக்கட்டும்.

யோவான் 21:9-14 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். நாமும் உயிர்த்தெழுந்து இயேசுவோடு விருந்து அருந்துவோம் என்றும் இந்த மாபெரும் விருந்தில் எல்லா மக்களும் கலந்து கொள்வதே நமது நோக்கம் என்றும் விளக்கவும்.

அருகில் உள்ள புறக்கணிக்கப்பட்ட சமுதாய மக்களுக்காகவும், அவர்களுக்கு சேவை செய்யத் திட்டமிட்டுள்ளவர்களுக்காகவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து ஜெபிக்கவும்.

எல்லோருமாக எண்ணாகம் 13:18 ஐ **மனனம் செய்க.**

**உங்கள் மக்களுக்குக் கற்பிக்க வேண்டிய வார்த்தைகள்.**

**ஆராய்ச்சி.** மக்களுக்கு உதவி செய்யத் திட்டமிடுவதற்கு வசதியாக, மக்களையும் இடங்களையும் பற்றிய துல்லியமான விவரங்களைக் கவனத்துடன் கண்டுணர்தல்.

**சென்றடையாதோர்.** பிற கிறிஸ்தவர்களின் உதவி இன்றி தங்கள் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க போதுமான சபைகளும் கிறிஸ்தவர்களும் இல்லாத சமுதாய மக்கள்.

**அறுவடை நிலம்.** சென்றடையாத மக்கள் கூட்டம் வாழும் சென்றடையாத இடங்களின் பெயர்.

**அறுவடைப் படை.** ஒரு சமுதாய மக்களிடையே சீஷர்களையும் சபைகளையும் உருவாக்க விருப்பப்படும் கிறிஸ்தவர்களின் வகையும் எண்ணிக்கையும்.

**அறுவடைப் பலன்.** ஒரு சமுதாய மக்கள் மத்தியில் இயேசுவை நம்பி ஞானஸ்நானம் எடுத்துள்ள நபர்களின் எண்ணிக்கை.